Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 15 | (01-10-1992) | வியாழக்கிழமை | ஓசை 226

## 850 பேர் 3 வருட காலமாக விசாரணையின்றி தடுத்து வைப்பு

பல்வேறு காரணங்களுக்காக சிறிலங்காவிலுள்ள 115 தடுப்பு முகாம்களில் 850 பேர் கடந்த மூன்று வருடங்களாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் சிறிலங்கா படை அதிகாரிகளின் இச்செயலானது ஓர் மனித உரிமை மீறலே என சர்வதேச மனித உரிமை தொடர்பான நடவடிக்கைகளை ஆராயும் குழுவின் செயலாளர் கண்டனம் செய்துள்ளார். அநுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு, பொலநறுவை போன்ற பிரதேசங்களிலுள்ள 104 பொலிஸ் நிலையங்களிலும் 11 இராணுவ முகாம்களிலும் கடந்த 89, 90, 91 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 850 பேர்வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் [4ஆம் பக்கம் பார்க்க]

# அடம்பனில் இராணுவத்தை வழி மறித்து விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதல்

## அகோர குண்டு வீச்சின் மத்தியிலும் ஐந்தரை மணிநேரக் கடும் சண்டை

(நமது நிருபர்)

மன்னார் மாவட்டம் மாந்தை இராணுவ முகாமிலிருந்து டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் வெளியேறிய இராணுவத்தினரை அடம்பனில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமடக்கித் தாக்கியதைத் தொடர்ந்து கடும் சண்டை மூண்டது. அதிகாலை 5.30 மணியில் இருந்து பகல் 11.00 மணிவரையிலும் இம் மோதல் இடம்பெற்றது. இதேவேளை, இம்மோதலின் போது இராணுவத்தினருக்கு துணையாக இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், மூன்று உலங்குவானூர்திகளும் தாக்குதல் நடத்தின இம்மோதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

நேற்று அதிகாலை 5-30 மணியளவில், இரண்டு குண்டு வீச்சு விமானங்கள், மூன்று உலங்குவானூர்திகளின் துணையுடன் மாந்தை இராணுவ முகாமிலிருந்து டாங்கிகள், கவசரக வாகனங்கள் சகிதம் முன்னேறிய இராணுவத்தினர் அடம்பன் பகுதிக்கு வந்த வேளை விடுதலைப் புலிகள் வழிமடக்கித் தாக்குதல் தொடுத்தனர். சுமார் ஐந்தரை மணித்தியாலங்கள் வரை இம்மோதல் இடம் பெற்றது. இம் மோதல்கள் இடம்பெற்ற வேளையில் அடம்பன் பகுதியைச் சூழவுள்ள பகுதி மீது பரவலாக குண்டுவீச்சுத் தாக்குதலை விமானப்படை நடத்தியவண்ணமிருந்தது.

இம மோதலில் இராணுவத்தினருககு பலதத இழபபு ஏற்பட்டதாயினும் அடம்பனில் இருந்து இராணுவம் சற்று முன்னேறி தற்பொழுது ஆண்டான்குளம் என்னும் பகுதியில் நிலைகொண்டுள்ளதாக நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளியவளையில் குண்டுவீச்சு நாலவர் பலி: ஐவர் காயம்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளைப் பகுதியில் நேற்றுக் காலை பத்து மணி ...

மடைந்துள்ளனர்.

விமானக் குண்டு வீச்சு காரணமாக உடல் சிதறிய நிலையில் அவ்விடத்திலேயே சபாரத்தினம் (38 வயது) சபாரத் ...

வர்கள் எனவும், தெரிய வருகிறது. வவுனியா பகுதியை சேர்நதசே சின்னராசா என்பவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

## வீரச்சாவு ஞானவேல்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் மாந்தை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் நடைபெறறபோது பரவலாக இடம்பெற்ற குண்டு வீச்சில் ஆட்காட்டிவெளி எனுமிடத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த ...

## எறிகணைத் தாக்கு பெண் காயம்

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூளாய், பொன்னாலை, சுழிபுரம் ஆகிய பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.


நேற்று முற்பகல் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் இப்பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளை நாடிச் சென்றனர்.

இதேவேளை பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்தும் மல்லாகம் பகுதியை

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'குமாரி' 8 ஆம் திகதி வரலாம்

கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நிற்கும் "குமாரி" என்ற கப்பல் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் எதிர்வரும் ஆறாம் திகதி புறப்பட உள்ளது. இக்கப்பல் எட்டாம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (சு)



கடந்த 25-09-1992 அன்று அதிகாலை பூநகரி - பள்ளிக்குடா மினி முகாம்கள், தொடர் காவலரண்கள் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கான திட்டத்தை தளபதி பால்ராஜ் விளக்குவதையும், மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் சுபன் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம். இத்தாக்குதலில் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் சுபன் வீரச்சாவடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோரிடம் உதவியை நிறுத்துமாறு கோ...

வரும், மூன்று உலங்குவானூர்திகளும் தாக்குதல் நடத்தின இம்மோதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

நேற்று அதிகாலை 5-30 மணியளவில், இரண்டு குண்டு வீச்சு விமானங்கள், மூன்று உலங்குவானூர்திகளின் துணையுடன் மாந்தை இராணுவ முகாமிலிருந்து டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் முன்னேறிய இராணுவத்தினர் அடம்பன் பகுதிக்கு வந்த வேளை விடுதலைப் புலிகள் வழிமடக்கித் தாக்குதல் தொடுத்தனர். சுமார் ஐந்தரை மணித்தியாலங்கள் வரை இம்மோதல் இடம் பெற்றது. இம் மோதல்கள் இடம்பெற்ற வேளையில் அடம்பன் பகுதியைச் சூழவுள்ள பகுதி மீது பரவலாக குண்டுவீச்சுத் தாக்குதலை விமானப்படை நடத்தியவண்ணமிருந்தது.

இம் மோதலில் இராணுவத்தினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டதாயினும் அடம்பனில் இருந்து இராணுவம் சற்று முன்னேறி தற்பொழுது ஆண்டான்குளம் என்னும் பகுதியில் நிலைகொண்டுள்ளதாக நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முள்ளியவளையில் குண்டுவீச்சு நால்வர் பலி: ஐவர் காயம்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளைப் பகுதியில் நேற்றுக் காலை பத்து மணியளவில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய அகோரமான குண்டு வீச்சுத் தாக்குதல்களால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

விமானக் குண்டு வீச்சு காரணமாக உடல் சிதறிய நிலையில் அவ்விடத்திலேயே சபாரத்தினம் (38 வயது) சபாரத்தினம் கிளி (28) சபாரத்தினம் ரஜிதா (8) ஆகியோரே பலியான ஒரே குடும்பத்தை சேர்ந்தோரெனவும் இவர்கள் திருகோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்திருந்தவர்கள் எனவும், தெரிய வருகிறது. வவுனியா பகுதியை சேர்ந்த சே. சின்னராசா என்பவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார். மேலும், காயமடைந்த ஐந்து பேரும் உடனடியாக அண்மையிலிருந்த மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## வீரச்சாவு ஞானவேல்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் மாந்தை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் நடைபெற்றபோது பரவலாக இடம்பெற்ற குண்டு வீச்சில் ஆட்காட்டிவெளி எனுமிடத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த ஞானவேல் (திருச்செல்வம் மயில்வாகனம் - தச்சனாமருதமடு, மடுக்கோவில், மன்னார்) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

காப்பான பகுதிகளை நாடிச் சென்றனர்.

இதேவேளை பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்தும் மல்லாகம் பகுதியை

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'குமாரி' 8 ஆம் திகதி வரலாம்

கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நிற்கும் "குமாரி" என்ற கப்பல் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் எதிர்வரும் ஆறாம் திகதி புறப்பட உள்ளது. இக்கப்பல் எட்டாம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)



கடந்த 25-09-1992 அன்று அதிகாலை பூநகரி - பள்ளிக்குடா மினி முகாம்கள், தொடர் காவலரண்கள் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கான திட்டத்தை தளபதி பால்ராஜ் விளக்குவதையும், மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் சுபன் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம். இத்தாக்குதலில் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் சுபன் வீரச்சாவடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோரிடம்

# உதவியை நிறுத்துமாறு கோர எதிரணித் தொழிற் சங்கங்கள் முடிவு

சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமை மீறல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது இதனால் உதவி வழங்கும் சகல நாடுகளிடமும் மற்றும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களிடமும் சிறிலங்காவுக்கு வழங்கும் சகல உதவிகளையும், ஒத்தாசைகளையும் நிறுத்தும்படி கோரிக்கை விடுக்கப் போவதாய் எதிரணித் தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா எல்லைப் பகுதியிலிருந்து சிங்களவர் வெளியேற்றம் அதிகரிப்பு

## — ராணுவத்தை நம்பத் தயாரில்லையாம்

(வவுனியா)

வவுனியா எல்லைப் புறக் கிராமங்களில் இருந்து சிங்களக் குடியேற்ற வாசிகள் பெருமளவில் இடம் பெயர்ந்து செல்வதாகத் தெரியவருகின்றது. வவுனியா நகருக்கு மேற்கிலும், கிழக்கிலுமிருந்து இவ் இடம்பெயர்வுகள் இடம் பெறுவதாகவும், இவ்வாறு இடம் பெயர்ந்து செல்லும் சிங்களக்குடும்பங்களைத் தங்க வைக்க வெவுனிக்குளம் பகுதியில் இருந்து மதவாச்சி வரையுள்ள வீதியோரக் காணிகளில் நூற்றுக்கணக்கான குடிசைகள் அமைக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியாவிற்கு மேற்கிலும், கிழக்கிலும் இருந்து ஏராளமான சிங்களக் குடும்பங்கள் சமீப காலமாக இடம் பெயர்ந்து செல்வதாகவும் இக்குடும்பங்களைப் பராமரிக்கும் நோக்குடனேயே இக் குடிசைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அறியப்பட்டது.

அமைக்கப்பட்ட குடிசைகளில் இப்போது பல குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் சிறிலங்கா அரசாங்கமே இவர்களைப் பராமரித்து வருவதாகவும் அறியப்பட்டது.

இடம் பெயரும் அகதி மக்களைத் தடுக்கும் நோக்குடனும் இடம் பெயர்ந்த அகதி மக்களை மீளக் குடியேற்றும் நோக்குடனும் எல்லைப் புறச் சிங்களக் கிராமங்களுக்கு பாரிய பாதுகாப்பு வழங்கும் எண்ணத்துடன் இராணுவம் குவிக்கப்பட்டு வருகின்ற போதிலும் சிங்கள மக்களின அச்சத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

வவுனியா மாவட்டம் எல்லையோரத்தில்

## பொலிஸார், இராணுவத்தினர் திடீர், திடீரென தலைமறைவு

கண்காணிக்க விசேட அவதானிப்பு பிரிவு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் எல்லைப்புறங்களில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிஸாரும் திடீர் திடீர் என்று தலைமறைவாகி வருகின்றனர் என்று நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிங்கள மக்கள் அடர்த்தியாக வாழும் எல்லைப்புறக் கிராமங்களில் காவல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினர் உயர் அதிகாரிகளுக்குத் தெரியாமல் தப்பி ஓடுகின்றனராம். இதனால் இராணுவத்திலும் பொலிஸிலும் தப்பி ஓடுபவர்களை அவதானிப்பதற்காக விஷேட அவதானிப்புப் பிரிவு ஒன்று செயல்படுவதாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. உட்பட கட்சிகளுக்குள் ஜே.வி.பி. ஊடுருவியுள்ளதாம்

## - பாதுகாப்பு அமைச்சு அதிகாரி தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல அரசியல் கட்சிகளில் ஜே. வி. பி. ஊடுருவியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள் செய்தித்தாள் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அரசியல்கட்சிகள் தமது அடிமட்டத் தொண்டர்களின் நடவடிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்தாதிருந்தால் 1971 மற்றும் 1988 கிளர்ச்சிகள் போன்றகிளர்ச்சிகள் நாட்டில் மீளவும் ஏற்படக் கூடிய சாத்தியம் இருப்பதாக அதே வட்டாரங்கள் எச்சரித்துள்ளன கடந்த சில மாதங்களில் தென் இலங்கையில் இடம் பெற்று வரும் கொள்ளைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அவசர கால சட்டத்தை நீக்க

# பல்வேறு உலக நாடுகளின் 40 தொழிற்சங்கம் கோரிக்கை

அவசர காலச் சட்டத்தையும், தொழிற் சங்கங்களின் உரிமைகளை கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்களையும் நீக்க நடவடிக்கை எடுக்கும்படி பல்வேறு நாடுகளையும் சேர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சங்க அமைப்புகள் சிறிலங்கா அரசைக் கோரியுள்ளதாய் தெரிய வருகிறது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பெல்ஜியம், போத்துக்கல், ஜேர்மன் டென்மார்க், அயர்லாந்து,

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு



வில்லவன்

யாழ். மாவட்டத்திலுள்ள வளலாய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

பிரேமாவின் இந்திய விஜயம்

## உத்தியோகபூர்வமானது ; சிறிலங்கா அரசு அறிவிப்பு

[கொழும்பு]

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா சார்க் நாடுகளின் தலைவர் என்ற வகையில் மேற்கொள்ளவிருக்கும் இந்திய விஜயம் உத்தியோக பூர்வமானதொன்றாக சிறிலங்கா அரசாங்கம் நேற்று அறிவித்தது

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ராவ் - பிரேமதாசா இன்று பேச்சுவார்த்தை

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவ்வை இன்று சந்தித்து சிறிலங்கா - இந்தியா இரு தரப்பு நட்புக் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சார்க் அமைப்புக்கு இந்தியா தரும் ஆதரவு பற்றியும், இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது குறித்தும் மற்றும் விடுதலைப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### யாழோசையின் இசைவகுப்புகள்

புல்லாங்குழல், வயலின், ஓகன், கிற்றார் ஆகிய பாடங்கள் 05-10-1992 விஜய தசமி அன்று (திங்கள்) மாலை 4. 30 மணிக்கு ஆரம்பிக்கப்படும். தொடர்பு:- "யாழோசை" 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (3282)

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை வாங்குகிறோம். அண்ணாகோப்பி கடைகளிலும் ஏற்கப்படும். - மில்க் வைற், யாழ்ப்பாணம். (சி/5144)


## நீரிழிவு நோய் கருத்தரங்கு

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினரால் சென்ற 23ஆம் திகதி நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இலவச இரத்த அமுக்கப் பரிசோதனையும் அதைத் தொடர்ந்து யாழ். மாநகரசபை சுகாதார உத்தியோகத்தர்களினால் அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

இதேபோல் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை நீரிழிவுநோய் பற்றிய கருத்தரங்கும் சில நாட்களின் பின்னர் மேற்படி நோய்க்கான வைத்திய பரிசோதனையும் நடைபெறவுள்ளது. (42)

## சிற்பக் கருத்தரங்கு

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின்சன்மார்க்கநுண்கலை மன்றம் சித்திர சிற்ப கருத்தரங்கொன்றினை நடாத்த உள்ளது.

இக்கருத்தரங்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 8 30 மணி முதல் 2.00 மணி வரை நடைபெற உள்ளது.

மேற்படி கருத்தரங்கில் கலைக்கோட்பாடுகள் பாரம்பரிய ஓவியக்கலை உயிரோவியம், ஐரோப்பிய கலை வரலாறு சித்திர ஓவியம், சிறுவர் சித்திரம், கற்கை நெறி இலங்கைக்கலை வரலாறு, சிற்பக் கலை கட்டமைப்பு என்பன பற்றியும் கருத்துக்கள் இடம் பெறும்,

## அகதி முகாம்களில் குழாய்க் கிணறு

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்மானிப்பாயிலுள்ள அகதி முகாம்களுக்கு குழாய்க்கிணறுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மானிப்பாய் அதிகார் செல்லமுத்து வீதியிலுள்ள முகாமிற்கு இரு கிணறுகள் அமைப்பதற்கான வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந் நிறுவனம் இப் பகுதியில் வலி மேற்கிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு பல முகாம்களை அமைத்துக் கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது. (42)

## உயிரியல் வாயுகூடம் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சுவிடிஷ் நிறுவனமொன்றின் உதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வரும் உரும்பராய் ஞானசம்பந்தர் சிறுவர் இல்லத்தில் உயிரியல் வாயுகூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்காக சுவிடிஷ் நிறுவனம் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பத்து மூவாயிரம் ரூபாவை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை ஆரம்பிப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக பத்து உயர்தரப் பசுமாடுகளை வாங்குவதற்கு சுவிடிஷ் நிறுவனம் பணம் வழங்கியுள்ளது.

உயிரியல் வாயு உற்பத்தி செய்யப்படுமாயின் பெருமளவில் எரிசக்தி பெறப்படும் என்பது தெரிந்ததே. (42)

## நேர்முகப் பரீட்சை முடிவுற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் பரிசாரகர் பயிற்சிக்கு தெரிவானோரிற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் இருந்து வருகை தந்த சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவரின் தலைமையில் கடந்த திங்கள் நடைபெற்றது.

இந் நேர்முகப் பரீட்சையில் 35 பேர் கலந்து கொண்டனர் முன்னர் அவர்களிற்கான நேர்முகப்பரீட்சைகள் கொழும்பில் நடைபெற இருந்தது அதனைத் தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் எடுத்த முயற்சியைத் தொடர்ந்து இந் நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்திலேயே சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவரின் தலைமையில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## மக்களின் விடிவிற்காக திலீபன் இலட்சிய வேள்வி

— மறவன்

(குருநகர்)

"போராடுவதற்கு வயது முக்கியமல்ல இருபத்துமூன்றே வயது நிரம்பிய தியாகச் செம்மல் திலீபன் இந்த மண்ணின் மக்களது விடிவுக்காக ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் தொடர்ந்து பன்னிரு நாட்கள் உண்ணா நோன்பிருந்து தனது இலட்சிய வேள்வியினூடாக இந்திய ஜனநாயகத்தினை புட்டுக் காட்டினான்"

குருநகர் தொடர்மாடி முன்றலில் நடைபெற்ற மூன்று நாள் தொடர் உண்ணா விரத முடிவில் தியாகி திலீபனின் ஐந்தாவதாண்டு நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய யாழ் மாவட்ட கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டம் தொடர்மாடி சென்- லூட்ஸ் கழக செயலாளர் திரு ஏ சி ஏணஸ்ற் தலைமையில் நடைபெற்றது

திரு. மறவன் மேலும் பேசுகையில் "குருநகர் மக்களைப் பார்த்து நான் பெருமிதம் அடைகிறேன் எந்த உரிமைக்காக திலீபன் உயிரை நீத்தானோ அந்த உணர்வுடன் 72 மணிநேரம் இந்த எட்டு இளைஞர்களும் உண்ணா நோன்பிருந்தமை பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்" என்றார்.

மாவீரர்பணிமனைப் பொறுப்பாளர் திரு. கடாபியும் நினைவுரை நிகழ்த்தினார். (21)

## யானை என நினைத்து தம்பிக்கு அண்ணை சூடு

(வவுனியா)

யானை என்று எண்ணி தம்பியை நோக்கி அண்ணன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தம்பி இறந்தார்.

இப்பரிதாபகரமான சம்பவம் கோழியகுளம் பகுதியில் கடந்த 24ஆம் திகதி அதிகாலை இடம் பெற்றது.

கோழியகுளம், குளப்பகுதியில் யானை நடமாட்டம் உண்டாம். சம்பவதினம் அண்ணன் நாட்டுத் துப்பாக்கியுடன் விளாமரக் காட்டை நோக்கிச் சென்றுள்ளார் அதிகாலை இருட்டில் நின்ற தம்பி அண்ணனை அச்சப்படுத்துவதற்காக யானைபோல கிளைகளை அசைத்து ஓசையெழுப்பினாராம். யானைஎனநம்பிக் கொண்ட அண்ணன் தம்பியை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்து விட்டு ஓடிவிட்டாராம்.

நன்கு பொழுது விடிந்த பின்னர் யானை சுடுபட்ட இடத்தை நோக்கி வந்த அண்ணன் தம்பி குற்றுயிராக இருப்பதைக் கண்டு அவரை கிளிநொச்சி வைத்திய சாலையை நோக்கிக் கொண்டு சென்ற போது இடையில் தம்பியின் உயிர் பிரிந்தது,

ஈஸ்வரபாதம் செந்தில்நாதன் (வயது 21) என்பவரே இறந்தவராவார். (தி)

போதனா வைத்தியசாலையில்

## பிறப்பு, இறப்பு பதிவதில் மக்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் இயங்கும் பிறப்பு, இறப்பு பதிவுக் காரியாலயம் சரியான வேளைக்குத் திறக்கப்படாமல் நேரம் சென்றே திறக்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

திங்கள் முதல் வெள்ளிவரை காரியாலயத்துக்குரிய வேலை நேரம் காலை10-00மணிமுதல் பி. ப 3- 30 வரை, என்றும் சனிக்கிழமையில் காலை 9-00 முதல் பி-ப 12-30 மணிவரை என்றும் அலுவலகக் கதவில் விளம்பரப்படுத்தப் பட்டிருந்தும் பல சந்தர்ப்பங்களில் சுமார் ஒருமணி நேரத்திற்கு மேல் தாமதித்தே காரியாலயம் திறக்கப்படுவதாக போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன இதனால்பணி காரணமாக அந்தக் காரியாலயத்துக்கு வரும் பொதுமக்கள் பல மணி நேரம் காத்திருப்பதாகவும் அதே வட்டாரங்கள் கூறுகின்றன-

## கிளிநொச்சிப் பகுதிகளில் நெற் செய்கை வீழ்ச்சி

கிளிநொச்சிப்பகுதிகளில் குளங்களில் நீர் மட்டம் மிகவும் குறைவாக காணப்பட்டமையினால் 648 ஏக்கரிலேயே பயிர் செய்கை பண்ணப்பட்டது இது வழமையாக நெல் செய்கை பண்ணப்படும் ஏக்கர் நிலங்களைவிட கணிசமான அளவு குறைவாகும்.

இக் கால சிறுபோக) பயிர் செய்கையானது பிரமந்தனாறு கல்மடுக்குளம், கனகாம்பிகைகுளம், புதுமுறிப்புக் குளம், வன்னேரிக்குளம் ஆகிய குளங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டது

இதனைத் தொடர்ந்து வரும் காலபோகமாகிய 92/93 களுக்கு விவசாயிகள் தேவையான ஆயத்தங்களை மேற்கொள்கின்றனர் இங்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் பி.டபிள்யு 351, ஏ.ரி. 85, ஏ.ரி. 86 போன்ற தூயவழி நெல்லினங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்க இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## தட்டெழுத்தாளர் பயிற்சி

தேசிய தொழில் பயிலுனர் சபை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையுடன் இணைந்து சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பயிற்சியொன்றை ஆரம்பித்துள்ளது

இப்பயிற்சி நெறிக்கு 60 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் இவர்களுக்கான ஒரு வருட பயிற்சி நெறியில் ஏழு மாதங்கள் உள்ளகப் பயிற்சியும் 5 மாதங்கள் வெளிக்களப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது மாதமொன்றுக்கு 50 ரூபா விசேட கொடுப்பனவாகவும் வழங்கப்படும். (4)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 22 | 03 | 1980



மறைவு : 13 | 10 | 1991

### செல்வி வனிதா இரத்தினம்

திதி: 01-10-92

வனிதா!

வந்திங்கே சொற்ப காலம்
வாடி விட்டாய் விரைவினிலே
குண்டாக இருந்த உன்னை
குச்சாக மாற்றிப் பின்னர்
பிஞ்சிலேயே பறித்ததம்மா வருத்தம்

கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியம்

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உயர்தர வகுப்புகளிற்கான விஞ்ஞான, கணித பட்டதாரி ஆசிரியர்களுக்கான

### பதவி வெற்றிடங்கள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் உயிரியல், பௌதிகவியல், கணிதவியல் பட்ட

## 8-வது பிறந்த நாள் வாழ்த்து



ஈழநாதம்
[ மக்கள் தினசரி ]

### விளம்பரப் பணிமனை

வடமராட்சி
வாழ்மக்கள்
நலன் கருதி

## நவீன களஞ்சியம்

( மொடேர்ண் ஸ்ரோர்ஸ் )

நெல்லியடிச்சந்தி, கரவெட்டி

என்னும்
விலாசத்தில்

22 — 03 — 1980  18 — 10 — 1991

## செல்வி வனிதா இரத்தினம்

திதி: 01-10-92

வனிதா!

வந்திங்கே சொற்ப காலம்
வாடி விட்டாய் விரைவினிலே
குண்டாக இருந்த உன்னை
குச்சாக மாற்றிப் பின்னர்
பிஞ்சிலேயே பறித்ததம்மா வருத்தம்
உனை நினைத்து உறவினர்க்கு வருத்தம்
குண்டம்மா என அழைத்து
குதர்க்கமாக வார்த்தையாடி
கண்டபடி பேச வைத்து ரசித்தோம்
உன் மணி'க்குரலை எங்கம்மா மறைத்தாய்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (3295)

உன்பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்

## ஓராண்டு நினைவலைகள்

வீர உதயம் 25 — 04 — 1966  வீர அஸ்தமனம் 14 — 09 — 1991

### வீரவேங்கை யூட்டி
### [இராசரத்தினம் ஜெயதேவி]

எங்கும் முரசறைந்து புறப்பட்டாய் மணலாறு
எதிரிப்படை பொடிபடச் செய்தாய் பெருயுத்தம்
தங்கத் தமிழுக்காய்த் தந்தாயுன் இன்னுயிரை
தமிழீழம் தலைவணங்க மாவீரர் ஆனாய்.

அன்று நீ சென்றின்று ஆண்டொன்று ஆனதம்மா
ஆறாத துயரமெம்மை அனலாய் எரிக்குதம்மா
என்றும் நீ இறைபடியில் கொலுவிருக்க
எந்நாளும் இறைவனிடம் கெஞ்சுவோமம்மா.

14- 09- 1991 அன்று மணலாற்றில் நடைபெற்றசெருவில் வீரச்சாவெய்திய வீரவேங்கை யூட்டி அவர்களுக்கும் ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

உடுத்துறை வடக்கு,
தாளையடி.

- உனது பிரிவால் துயருறும்
-குடும்பத்தினர்.
(3287)

---

கிளிநொச்சி மாவட்ட
கல்வி மேம்பாட்டு
நம்பிக்கை நிதியம்

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உயர்தர வகுப்புகளிற்கான விஞ்ஞான, கணித பட்டதாரி ஆசிரியர்களுக்கான

### பதவி வெற்றிடங்கள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் உயிரியல், பௌதிகவியல், கணிதவியல் பட்டதாரிகளாகஇருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 06-10-92 செவ்வாய்க்கிழமை பி. ப. 4-00 மணிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர், விஞ்ஞான பீடாதிபதி அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சை 09-10-92 வெள்ளிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

உதவிப் பதிவாளர்
விஞ்ஞானபீடம்.

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
30-09-92

[சி 5146[

## 8-வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி குகதர்சினி (நிலா)

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி, இல. 169 ஐச் சேர்ந்த சிவசந்திரபாரதி மங்களாதேவி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி செல்வி குகதர்சினி தனது எட்டாவது பிறந்த தினத்தை 01- 10- 1992 இன்று வியாழக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

குகதர்சினியை பிரான்சில் உள்ள அப்பா, வட்டக்கச்சி அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமி மற்றும் உற்றார், உறவினர்கள் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் அருளால் சகலகலைகளும் கற்று பார்போற்றும் உத்தமியாக நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.

இல 169, ஆறுமுகம் வீதி.
வட்டக்கச்சி

- குடும்பத்தினர்
( 3298 )

---

உற்பத்தியாளர்களே.........

உங்கள் நலன் கருதி

## நல்லின நாற்றுகள்

- பலாக் கன்றுகள்
- மாங்கன்றுகள்
- குறோட்டன்ஸ்
- றோஸ்
- பாம்ஸ்

முதலியன.

தரமான முறையில் விநியோகிப்போர்...

## ஸ்ரீ காந்தா தோட்டம்

கே. கே. எஸ். வீதி, இணுவில். (சி-5141)

---

ஈழநாதம்
[ மக்கள் தினசரி ]

### விளம்பரப் பணிமனை

வடமராட்சி
வாழ்மக்கள்
நலன் கருதி

## நவீன களஞ்சியம்

( மொடேர்ண் ஸ்ரோர்ஸ் )

நெல்லியடிச்சந்தி, கரவெட்டி

என்னும்
விலாசத்தில்
இயங்கிவருகிறது.

---

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 10 - 01

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினராற் படுகொலை செய்யப்பட்ட 2 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு யாழ். ஆனைக்கோட்டைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**வாசு** (சி. வாசுதேவன் - வல்வெட்டித்துறை, யாழ்.)

யாழ் காங்கேசந்துறை - மயிலிட்டிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

**சோதி** (வைத்திலிங்கம் பரமநாதன் - வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி, காங்கேசந்துறை, யாழ் )

1989 ஆம் ஆண்டு பழம்பாசிப் பகுதியில் இந்தியப் படையினரின் மிதிவெடியில் சிக்கியதில சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**மேஜர் குமுதன்** (சரவணமுத்து தளையசிங்கம் - சேமமடு, ஓமந்தை, வவுனியா)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு 10-ம் கட்டைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எம்மைப் பிரிந்த -

**பாவட்** (சுப்பிரமணியம் செல்வராஜ் - கன்னங்குடா, மட்டக்களப்பு)

அம்பாறை திருக்கோயில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு முகாமை அண்டிய கடலோரத்தில் சடலமாக மீட்கப்பட்ட தமிழ் இளைஞன்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட தளவாயைச் சேர்ந்த தமிழ் இளைஞன் - முஸ்லிம் காடையர்களினால் கொலையுண்ட நாவற்குடாவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி 5143)

### சிந்தனைக்கு

இயற்கையை அதன் எல்லா உருவங்களிலும் தோற்றங்களிலும் பாதுகாக்க வேண்டும். நிலம், மண், செடிகள் நீர் காற்று அனைத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

-பௌஸ் தொல்ஸ்கி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்-01- 10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## முன்னோடி நடவடிக்கை

தமிழீழப் பாடசாலைகளில் கடல்வளம் தொடர்பாக மாணவர்களுக்குத் தொழில் நுட்ப அறிவை ஊட்டும் வகையில் தொழில் முன்னிலைப் பாடங்களைக் கற்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான நடவடிக்கைகளை உரியவர்களுடன் தொடர்பு கொண்டு தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இன்று சிங்கள அரசாங்கத்தின் பொருளாதாரத் தடை, கடற்படையின் அடாவடித்தனம், கடலில் பயணம் செய்வதற்கான, மீன் பிடிப்பதற்கான தடைச் சட்டங்கள், கரை ஓரங்களில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு போன்ற பல்வேறு காரணிகளால் தமிழீழத்தின் மீன்பிடித் துறை பெருமளவில் நலிந்து போயுள்ளது. கடந்த காலத்தில் இலங்கையின் மீன்பிடியில் அரைவாசிக்கும் மேற்பட்ட அளவை உற்பத்தி செய்த தமிழீழக் கரை ஓரப்பகுதியில் இன்று மீன் பிடித்தல் என்பதே உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளும் ஒரு தொழிலாக மாறியுள்ளது.

ஆனால் மீன்பிடி தமிழீழப் பொருளாதாரத்தில் பெரும் முக்கிய பொருளாதார அம்சமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இலங்கைத் தீவின் மூன்றில் இரண்டு பங்கு நீளமான கரையோரப் பகுதி, அதாவது மறுச்சுக்கட்டியிலிருந்து பொத்துவில் வரையுள்ள கரையோரப் பகுதி தமிழீழத்திற்குச் சொந்தமானதாகும். பல குடாக்களையும், துறைமுகங்களையும் கொண்ட இக் கரையோரப் பகுதி மீன்பிடித் தொழிலுக்கு மிகவும் வாய்ப்பான சூழ்நிலையிலும் காணப்படுகின்றன.

அத்தோடு தமிழீழத்தின் வடகரையை அண்டிக் காணப்படும் பரந்த அளவினதான ஆழம் குறைந்த கடற்பரப்பும், மீனினங்கள் அதிகளவில் உயிர் வாழக் கூடிய சூழலும் இப்பகுதியில் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை உள்நாட்டு, வெளிநாட்டு வருவாயைத் தேடித் தரும் வருமானம் மிக்க தொழிலாகவும் இத்தொழில் உள்ளது. கடந்த காலத்தில் பெருமளவு மீன் தமிழீழப் பகுதியில் இருந்து தென்னிலங்கைப் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அத்தோடு வெளி

# நெடுங்கேணி இந்திய ராணுவ மினி முகாம் : புலிகள் தாக்கி நிர்மூலமாக்கிய வரலாறு

[3]

தங்கேசினுடைய குழுவினரும், காந்தனுடைய குழுவினரும் இதே மனநிலையிலேயே தனித்தனியே இருந்து யோசனை செய்தனர். எங்கள் மூன்று குழுவினருக்கும் எந்தவிதமான தொடர்புகளும் அற்ற நிலையில் மற்றைய இரு குழுவினரும் எனது ஆரம்பச் சூட்டிற்காக எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

நானோ, அல்லது தங்கேசோ அல்லது காந்தனோ முதலில் சூட்டினை ஆரம்பித்தால் ஏதாவது ஒரு அறைக்குள் இருக்கும் குழுவினர் அறைக்கு வெளியே வரமுடியாமல் இராணுவத்தினர் எம்மை மடக்கி விடுவார்கள். வெளியில் இருந்து துப்பாக்கிச் சூடு வந்தால் இராணுவத்தினரின் கவனம் எல்லாம் வெளிப்புறத்திலேயே இருக்கும். நாம் அனைவரும் யாருக்கும் தெரியாமல் அறையை விட்டு வெளியேறி வெளிப்புறமாக நிலை எடுத்திருக்கும் இராணுவத்தினரின் முதுகுப்புறம் நின்று சுலபமாகச் சுட்டுவிடலாம் என்பதே எமது தாக்குதல் திட்டமாகும். ஆனால் உள்ளே இருந்து நாமே சூட்டினை ஆரம்பித்தால் எமக்கு அருகில் உள்ள இராணுவத்தினர் உட்புறமாக நிலை எடுத்து எமது அறைகளின் வாசல்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கி விடுவார்கள். அப்படிச் செய்தால் அறையில் இருந்து வெளியே பாய ஒவ்வொருவராகச் சுட்டு வீழ்த்தி விடுவார்கள். ஆரம்ப சூடு சுடுபவர்கள் குழு மாத்திரமே அறையை விட்டு எந்த இழப்புக்களும் இன்றி வெளிவந்து தாக்கலாம். அவர்களையும் கூட சில நிமிடங்களில் இராணுவத்தினர் தமது நிலைகளில் இருந்து சுட்டு வீழ்த்தி விடும் நிலை. ஆகவே கூடுதலான வரையில் இழப்புக்களைக் குறைப்பதற்காக நாங்கள் 7.30மணி வரைக்கும் பொறுத்திருப்போம் என்றும் அதற்கிடையில் இராணுவத்தினர் எம்மைக் கண்டால் மாத்திரமே தாக்குதலை ஆரம்பிப்பது என்று எனது குழுவிற்கு சைகை மூலம் விபரித்தேன்.

உள்ளே இருக்கும் போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு நாளாக சழிந்துகொண்டிருந்தது. அடிக்கடி எனது மனதில் நவம் கூறிய வார்த்தை நினைவில் வந்து வந்து உறுத்தியது "இதில் விடும் சிறு பிழையும் தாக்குதலில் பங்குபற்றும் 15 பேரையும் எதையும் சாதிக்காமலே கொன்றுவிடும்" என்று நவம் சொன்னது உண்மைதானா என்று மனம் அடித்துக் கொண்டது எங்கோ சிறு பிழை நடந்துவிட்டது என்பது மாத்திரம் தெளிவானது.

இந்த இடை நேரத்தில் எங்கள் 15 பேரினது மனதிலும் எங்களுடன் தோளோடு தோள் நின்று போராடி மரணித்துக்கொண்ட சக போராளிகளினது நினைவுகளே மேலோங்கி நின்றது. இந்த இக்கட்டான நேரத்திலும் ஒவ்வோர் அறையிலும் ஒவ்வொருவரும் மற்றவரை சைகை மூலம் கேலி செய்து மனத்திலும் முகத்திலும் சந்தோசம் நிரம்பவே காணப்பட்டனர்.

வெளியில் நவத்தினுடைய நிலைப்பாடோ வேறுமாதிரி இருந்தது. 5.00 மணியளவில் ஓர் வீரனை இராணுவத்தினரின் வருகையை அறிவிக்கும்படி கூறி மினி முகாமிற்கு அருகில் அனுப்பி வைத்திருக்கின்றார். 5.00 மணிக்கு வந்த போராளி இராணுவத்தினர் வராததால் சற்று பின்னிற்கு உள்ள பற்றையில் பதுங்கி இருந்து பார்த்திருக்கின்றார். அவ்வீரனோ பகலில் நடந்த களைப்பினாலும் தொடர்ச்சியான நித்திரையின்மையாலும் சற்று உறங்கிவிட்டார் அவரிற்கு 5.15 இற்கு இராணுவத்தினர் வந்தது தெரிய வாய்ப்பின்றி போய்விட்டது. இதனால் இராணுவத்தினர் பாடசாலைக்கு வந்து சேர்ந்த விபரம் நவத்திற்கு தெரிய வாய்ப்பின்றி போய்விட்டது. இராணுவத்தினர் இன்னமும் பாடசாலைக்குள் வரவில்லை என்ற நினைப்பிலேயே நவம் மற்றைய போராளிகளுடன் உடனடியாக எமக்கு உதவி தேவைப்படின் வழங்கக் கூடிய ஏற்பாடுகளை செய்து கொண்டுள்ளார். ஆனால் நவத்தினுடைய மனமோ உள்ளே உள்ள எங்கள் பதினைந்து பேரையும் பற்றியும் எமது காப்பு பற்றியுமே சிந்தித்த வண்ணம் இருந்தது உள்ளே உள்ள எங்களிற்கு எந்த எந்த விதத்தில் உதவிகள் விரைவாக வழங்க முடியுமோ அந்த முறைகளை எல்லாம் சக போராளிகளிற்கு விளங்கப்படுத்திய வண்ணம் இருந்தார். பின்னர் நவம் 7.00 மணியளவில் வேறு இரு போராளிகளை முகாமில் இராணுவத்தினர் வந்து விட்டனரா என்பதை அறிய அனுப்பி வைத்தார்.

7 மணி 10 நிமிடம் அளவில் வெளியில் இருந்து பாடசாலை மினிமுகாம் கட்டடங்களை நோக்கி தொடர்ச்சியான 30 துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டன. எங்கள் அனைவரினது முகங்களிலும் தானாகவே சந்தோசம் நிரம்பியது. நாங்கள் எதிர்பார்த்த அந்தச் சந்தர்ப்பத்தை ஒழுங்காக செயல் படுத்தினோம்.

(தொடரும்)

> நெடுங்கேணி பாடசாலை இந்திய இராணுவ மினிமுகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த சம்பவத்தை இத்தாக்குதலுக்குத் தலைமை தாங்கிச் சென்ற முன்னாள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவின் தளபதியான மேஜர் கிண்ணி விபரிக்கிறார். இவர் 10-07-92 இல் இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவர்.

# கிழக்கில் இராணுவம் திணறுகிறது புலிகள் வெற்றிக்கு காரணமென்ன?

விடுதலைப் புலிகளின் திடீர்த் தாக்குதல்கள் இடம் பெறாத ஒரு வாரத்தைக் கழிப்பது என்பது வெகு சிரமமாகியுள்ளது. 1983இன் கறுப்பு யூலையை அடுத்து பதவிக்கு வந்த ஒவ்வொரு இராணுவ அதிகாரியும் எதிர்நோக்கும் பிரச்சினையாக இது உள்ளது இத் தாக்குதல்களின் போது இழப்புக்களின் எண்ணிக்கை இரட்டை எண்களை உடையதாக இருப்பது தாக்குதலின் ...

ஆனால் கடந்த ஜனவரிக்குப் பின்னர் திடீர் தாக்குதல்கள், மற்றும் கண்ணிவெடித் தாக்குதல் என்பவற்றின் மூலமாக கொல்லப்பட்ட அறுநூற்றைம்பது படையினரில் அநேகமானோர் கிழக்குப் பகுதியிலேயே கொல்லப்பட்டுள்ளனர் என்பதைச் சாதாரணமானதாகஎவரும் கொள்ள முடியாது.

முக்கியமாக கிழக்கில் விடுதலைப்புலிகள் கைக்கொள்ளும் தாக்கிவிட்டு தப்பியோடித் தப் பகுதிக் காடுகளுக்குள் இன்னும் ஒளிந்து கொண்டிருப்பதும், அவர்களுக்கு மக்கள் ஆதரவு தொடர்ந்து கிடைக்கிறது என்பதும் நன்கு புலனாகிறது.

அத்துடன் வெற்றிகரமாக அமையும் திடீர்த் தாக்குதல்கள் மூலம், அவர்களின் கவனமான திட்டமிடல், நீண்ட கால அவதானிப்பின் பேரிலான தகவல் பெறும் முறை, திடீரென வேகமாகச் செயற்படும் ஆற்றல் என்பவற்றைகள் நன்கு அவதானித்துள்ளனர் என்பதன் அடிப்படையில் குறிப்பிட்ட நேரத்தில் வெளியேறக் கூடாது என்ற கட்டளையை மீறச் சென்ற ரோந்துப் படையணியினர் தான் கடந்த திங்களன்று மட்டக்களப்பில் தாக்குண்டனர்.

மிகவும் நுட்பமாக, அவதானமாக தாக்குதல் திட்டங்களை வகுத்தல், இராணுவ நடமாட்டம் பற்றி நீண்ட காலமாக விடாமுயற்சியுடன் வேவு பார்த்தல், எதிர் ... குதல்கள் ஆகும். இதன்போது திடீரெனப் படையினரைச் சூழ்ந்து கொள்ளும் பெரும் எண்ணிக்கையான புலிகளின் வேகமான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திடுக்கிட்டுப் படையினர் சிதற வேண்டியதாகிறது.

ஓர் இடத்தில் தாக்குதல் நடைபெறும்போது, வேறொரு அணி உதவிக்கு விரையும் வரை படையினர் தாக்குதல்களைத் தொடர்வதோ, தாக்குபவர்களின் தரப்பில் இழ

அமையும் என்பதில் ஐயமில்லை. இலங்கைத் தீவின் மூன்றில் இரண்டு பங்கு நீளமான கரையோரப் பகுதி, அதாவது மறுச்சுக்கட்டியிலிருந்து பொத்துவில் வரையுள்ள கரையோரப் பகுதி தமிழீழத்திற்குச் சொந்தமானதாகும். பல குடாக்களையும், துறைமுகங்களையும் கொண்ட இக்கரையோரப் பகுதி மீன்பிடித் தொழிலுக்கு மிகவும் வாய்ப்பான சூழ்நிலையிலும் காணப்படுகின்றன.

அத்தோடு தமிழீழத்தின் வடகரையை அண்டிக் காணப்படும் பரந்த அளவினதான ஆழம் குறைந்த கடற்பரப்பும், மீனினங்கள் அதிகளவில் உயிர் வாழக் கூடிய சூழலும் இப்பகுதியில் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை உள்நாட்டு, வெளிநாட்டு வருவாயைத் தேடித் தரும் வருமானம் மிக்க தொழிலாகவும் இத்தொழில் உள்ளது. கடந்த காலத்தில் பெருமளவு மீன் தமிழீழப் பகுதியில் இருந்து தென்னிலங்கைப் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அத்தோடு வெளிநாட்டு செலாவணியைத் தேடித்தரும் உற்பத்தி பொருளாகவும் இக்கடல் வளங்கள் அமைந்திருந்தன. எழுபதுகளின் பிற்பகுதியிலும், எண்பதுகளின் முற்பகுதியிலும் தமிழீழக் கடற்பரப்பில் பிடிக்கப்பட்ட கடலுணவுகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின. இதனால் பெருமளவு அந்நிய நாட்டுச் செலாவணி கிடைக்கப் பெற்றதோடு உயர்ந்தளவு வருமானமும் கிடைக்கப் பெற்றது.

இந்நிலையில் இம்மீன்பிடித் தொழிலை விருத்தி செய்வதும் அதன் மூலம் தமிழீழப் பொருளாதாரத்தை மேம்படுத்தத் திட்டங்கள் தீட்டுவதென்பதும் மிகவும் அவசியமான தொன்றாகும். மீன் பிடிப்பதற்கும், கடற்பரப்பில் பயணம் செய்வதற்கும் இன்று சிறிலங்கா கடற்படை அச்சுறுத்தலாக இருப்பினும் எதிர்காலத்தில் தமிழீழப் பொருளாதார மேம்பாட்டிற்கு ''விதைப்பின்றி அறுவடை தரும் ஒரு விளை நிலமாக" கடற்பரப்பு விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதாவது இன்று போரினால், பெரும் பொருளாதார அழிவிற்கு உட்பட்டுள்ள தமிழீழப்பகுதியில் உடனடியாக பெரும், வருமானத்தை தேடிக் கொடுக்க கூடியதாக விதைப்பின்றிக் அறுவடை தரும் விளை நிலங்களான கடற்பரப்புக்கள் உள்ளன. மேலும் இன்று உலகில் அதிகரித்துவரும் உலகக் குடித்தொகைக்கு கடலே உணவளிக்கும் களஞ்சியமாக எதிர்காலத்தில் இருக்கும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். அத்தோடு கடல் வளம் பயன்பாடு என்பது தனியாக மீன்பிடி என்பது மட்டுமல்ல கடலின் அடித்தளத்தில்கனிப் பொருள் வளங்கள் நிறைந்து கிடப்பதாகவும் புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இக்கடல்வளத்தை பயன்படுத்துவது குறித்து இன்றே பெரியளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதும், திட்டங்கள் இடப்படுவதும் தமிழீழப் பொருளாதாரத்திற்குப் பெரும் பலம் சேர்க்கும் ஒன்றாகவே அமையும் என்பதில் எவரும் சந்தேகப்படத் தேவையில்லை. இந்நிலையில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தமிழீழப் பாடசாலைகளில் மாணவருக்கு கடல்வளத் தொழில் நுட்பப் பாடம் ஒன்றை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் வரவேற்கத் தக்கதும், முன்னோடி நடவடிக்கையும் ஆகும் அத்தோடு கடந்த காலத்தில் கல்வித் துறையில் விடப்பட்ட வெற்றிடம் ஒன்றை நிரப்புவதாக அமையும் என்பதிலும் சந்தேகம் எதுவுமில்லை.

---

# கிழக்கில் இராணுவம் திணறுகிறது

# புலிகள் வெற்றிக்கு காரணமென்ன?

விடுதலைப் புலிகளின் திடீர்த் தாக்குதல்கள் இடம்பெறாத ஒரு வாரத்தைக் கழிப்பது என்பது வெகு சிரமமாகியுள்ளது. 1983இன் கறுப்பு யூலையை அடுத்து பதவிக்கு வந்த ஒவ்வொரு இராணுவ அதிகாரியும் எதிர்நோக்கும் பிரச்சினையாக இது உள்ளது இத் தாக்குதல்களின் போது இழப்புக்களின் எண்ணிக்கை இரட்டை எண்களை உடையதாக இருப்பது தாக்குதலின் தீவிரத்தை உணர்த்துவதாகும்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 60க்கு மேற்பட்ட படையினர் விடுதலைப்புலிகள் நடத்திய மறைந்திருந்து தாக்குதல், திடீர்த் தாக்குதல், மற்றும் வெடிகுண்டுத் தாக்குதல் என்பவற்றின் மூலம் உயிரிழந்துள்ளனர்.

22 முஸ்லிம்கள் கொலையுண்ட சைக்கிளில் இருந்த ஐஸ்கிறீம் பெட்டியொன்றில் மறைத்து வைக்கப்பட்ட குண்டு வெடித்ததுடன் இம்மாதம் ஆரம்பமாகியது.

அதனையடுத்து புதன்கிழமை செப்டப்பர் 9 அன்று 14 பேர் மணலாற்றிலும், 6 பேர் திருகோணமலையிலும் நடந்த வெவ்வேறு கண்ணி வெடித் தாக்குதல்களில் உயிரிழந்தனர்.

அதற்கு அடுத்து மூதூருக்கு அருகே 'பாதை' (பெரி) வெடிகுண்டு வைத்து தகர்க்கப்பட்டதன் மூலம் இருபது பேர் கொலையுண்டனர்.

ஒரு வாரத்திற்குப் பின்னர் விவசாயிகளுக்கு பாதுகாப்பளிக்கச் சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள்மோட்டார் தாக்குதல் நடத்தியதில் படையினர் ஒருவர் கொலையுண்டார்.

கடந்த திங்கட்கிழமையன்று முப்பத்திரண்டு பேரைக் கொண்ட ரோந்து அணியொன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதால் இருபத்து மூன்று பேர் கொல்லப்பட்டனர். சிறிய ஆயுதங்கள் மோட்டார்கள், ஆர் பி. ஜிக்கள் கொண்டு புலிகள் நடத்திய இத் தாக்குதல் 30-45 நிமிடம் வரை நீடித்தது.

இதேவேளை கடல், வான் மற்றும் தரை மார்க்கமாக படையினர் எடுக்கும் கடும் நடவடிக்கைகளின் போது புலிகள் மூன்று எண்களைக் கொண்ட அளவில் உயிரிழந்து வருகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால் கடந்த ஜனவரிக்குப் பின்னர் திடீர் தாக்குதல்கள், மற்றும் கண்ணிவெடித் தாக்குதல் என்பவற்றின் மூலமாக கொல்லப்பட்ட அறுநூற்றைம்பது படையினரில் அநேகமானோர் கிழக்குப் பகுதியிலேயே கொல்லப்பட்டுள்ளனர் என்பதைச் சாதாரணமானதாகஎவரும் கொள்ள முடியாது.

முக்கியமாக கிழக்கில் விடுதலைப்புலிகள் கைக்கொள்ளும் தாக்கிவிட்டு தப்பியோடும் தந்திரோபாயத்தின் காரணமாக அரைவாசிபட்டாலியன் அளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டுவிட்டனர்.

இந்தப் புள்ளி விபரங்கள் வெளியிடப்படுவது வெட்கக்கேடானது எனக் கருதப்படலாம். ஆனால் இராணுவம் புதியவர்களை சேர்ப்பதற்கு சிரமப் படும் ஒரு வேளையில் கொல்லப்படுவோர் எண்ணிக்கை திகைப்பூட்டுவதாகவும், அது புதிதாக சேர வருவோரின் மனநிலையை பாதிப்பதாகவும் உள்ளது அண்மைக் கால நேர்முகத் தேர்வுகளுக்கு வருவோரில் பெரும் பாலானோர் ஏழை விவசாயிகளின் பிள்ளைகள் என்பதும், அறிவாற்றல் குறைந்த மட்டங்களிலிருந்து வந்தோர் என்பதும் கவனிக்கத்தக்கது.

விடுதலைப் புலிகள் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் முல்லைத்தீவு பகுதியிலும் நடத்தும் திடீர்த் தாக்குதல்கள் மூலம் அவர்கள் அந்தந்தப் பகுதிக் காடுகளுக்குள் இன்னும் ஒளிந்து கொண்டிருப்பதும், அவர்களுக்கு மக்கள் ஆதரவு தொடர்ந்து கிடைக்கிறது என்பதும் நன்கு புலனாகிறது.

அத்துடன் வெற்றிகரமாக அமையும் திடீர்த் தாக்குதல்கள் மூலம், அவர்களின் கவனமான திட்டமிடல், நீண்டகால அவதானிப்பின் பேரிலான தகவல் பெறும் முறை, திடீரென வேகமாகச் செயற்படும் ஆற்றல் என்பவற்றையும் புரிந்து கொள்ள முடியும்.

சுருக்கமாக மறுவளத்தைப் பார்த்தால் படையினர் இத்தகைய தாக்குதல்களில் சிக்குவதன் காரணம் புரியவரும். போர்முனையில் இருக்கும் படையினர் மாதக்கணக்காக ஓய்வின்றியும், நிவாரணமின்றியும் வைக்கப்பட்டிருப்பதால் மனச் சலிப்புக்கும், சவலையீனத்துக்கும் இடம் கொடுக்கின்றனர். போதுமான பயிற்சியும் அவர்களுக்கு கிடைப்பதில்லை.

1983க்குப் பின்னர் படையிற் சில அணிகளைச் சேர்ந்தவர்கள் ஒரு வருடத்திற்கும் மேலான காலப்பகுதிகளைப் போதுமானளவு இடைவெளி இல்லாமல் தொடர்ந்தும் போர்முனைகளிலேயே கழித்துள்ளனர் என்பது நம்புவதற்குச் சில வேளை கடினமானதாக இருக்கலாம்.

இந்த நிலையில்மிகத்திறமையானவர்கள் கூட சில சமயம் தவறுவிட நேரிடுவது இயல்பானதே. ரோந்துப் படையினர் புறப்படும் நேரம் குறித்து புலிகள் நன்கு அவதானித்துள்ளனர் என்பதன் அடிப்படையில் குறிப்பிட்ட நேரத்தில் வெளியேறக் கூடாது என்ற கட்டளையை மீறச் சென்ற ரோந்துப் படையணியினர் தான் கடந்த திங்களன்று மட்டக்களப்பில் தாக்குண்டனர்.

மிகவும் நுட்பமாக, அவதானமாக தாக்குதல் திட்டங்களை வகுத்தல், இராணுவ நடமாட்டம் பற்றி நீண்டகாலமாக விடாமுயற்சியுடன் வேவு பார்த்தல், எதிர்பாராத வகையில் திகைப்பூட்டும் வண்ணம், மின்னல் வேகத்தில் தாக்குதலை நடத்தி முடித்தல், உறுதியுடனும் ஆற்றல் மிகுந்த முறையிலும் போரிடுதல், இத்தகைய பண்புகள் தான் விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. சில வேளை தாக்குதல்கள் நடத்த முன்பு அவர்கள் ஒத்திகைகள் கூட நடத்திப் பார்க்கின்றனர்.

இந்தப் பயிற்சியும், ஒத்திகைகளும் தான் அவர்களின் மனோதிடத்திற்கு காரணமாகும், ஒரு தரப்பினரின் விளக்கத்தின்படி விடுதலைப் புலிகள், களைத்துப் போயுள்ள, ஆற்றல் குறைந்த இராணுவ அணிகள் மீது தாக்குவதாக சொல்லப்படுகிறது.

புலிகள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் தாக்குதல் நடத்துவதானால், ஒன்று முதல் ஒன்றரை மாதங்கள் வரை காத்திருந்து திட்டமிட்டு தயாரிப்புகளை மேற்கொள்கின்றனர். கடந்த மாதத்தில் மட்டக்களப்பில் 14 படையினரும், மற்றும் 15' படையினர் வவுனியாவிலும், 7 பொலிசார் அம்பாறையிலும்,

யாழ்ப்பாணத்தில் முன்னணிப் பாதுகாப்பு எல்லையில் தாக்குதல் நடாத்தி. ஐந்து படையினரையும் புலிகள் கொன்றுள்ளனர். அதைவிட பஸ்குண்டுவெடிப்பில் படையினர் ஒருவர் திருக்கோணமலையில் கொல்லப்பட்டார்.

அதற்கு முதல் மாதத்தில் திருக்கோணமலை, கட்டுப்பொத்த, மட்டக்களப்பு. யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

ஊர்காவற்றுறையில் வெடித்த கண்ணிவெடியைத் தவிர ஐம்பத்தியேழு பெரிய தாக்குதல்களைப் புலிகள் நடாத்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவற்றில் 34 சிறந்த தாக்குதல்கள் ஆகும். இதன்போது திடீரெனப் படையினரைச் சூழ்ந்து கொள்ளும் பெரும் எண்ணிக்கையான புலிகளின் வேகமான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திடுக்கிட்டுப் படையினர் சிதற வேண்டியதாகிறது.

ஓர் இடத்தில் தாக்குதல் நடைபெறும்போது, வேறொரு அணி உதவிக்கு விரையும் வரை படையினர் தாக்குதல்களைத் தொடர்வதோ, தாக்குபவர்களின் தரப்பில் இழப்பை அதிகரிக்கச் செய்வதோ அடிக்கடி இடம் பெறும் விடயமாக இல்லை என்பது உண்மையே.

போர்முனையில் இராணுவத்தின் நடமாட்டத்தை அதிகரிக்கக் கூடியதான வகையில் வாகனங்கள், ஒரு பிளாட்டூன் அளவு துருப்புக்களை காவிச்செல்லக் கூடிய கெலிக்கொப்டர்கள் என்பன புலிகளின் தாக்குதல்களை வெல்வதற்கு இராணுவத்திற்கு வேண்டப்படுவதாகும்.

தாக்கிவிட்டுத் தப்பியோடிவிட முடியாது என்பது விடுதலைப் புலிகளுக்கு உணர்த்தப்படுமேயானால் தாக்குதல் தொடுப்பதை புலிகள் தவிர்க்கும் சாத்தியம் அதிகரிக்கும்.

தாக்கப்படும்படையினருக்கு விரைவாக உதவி வந்து விடுமென்றோ, தப்பியோடும் வழிகள் உலங்குவானூர்திகளால் முடக்கப்பட்டுவிடும் என்றோ புலிகள் உணர்ந்தால் தாக்குதல் நடத்த முன்பு இருமுறை சிந்திப்பர்

ஆனால், படையினரின் மனோதிடத்தைப் பேணுவதற்கும், போதிய பயிற்சி அளிக்கப்படுவதற்கும் மாற்றுவழிகள் கையாளப்பட்டேயாக வேண்டும். போர் முனையிலுள்ள படையினருக்கு போதிய ஓய்வும், சுழற்சி முறையிலான விடுமுறையும், மீள் பயிற்சியும் அளிக்கப்படும் போது தான் புது உற்சாகத்துடன் அவர்கள் போர் முனையில் கடமையிலீடுபடுவர்.

ஆகக்கூடுதலாக ஆறு முதல் ஒன்பது மாதங்கள் வரைதான் தொடர்ச்சியாகப் படையினர் போர் முகத்தில் இருக்கக்கூடும் என்றே இராணுவவட்டாரங்கள் கருதுகின்றன. பெருமளவிலான படையினரும், படையணிகளும் இருந்தால் மட்டுமே புலிகளின் தாக்குதல்களைக் கிழக்கில் இல்லாது ஒழிக்க முடியும். எனினும் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்றுஅதே வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

> ''மிகவும் நுட்பமாக, அவதானமாக தாக்குதல் திட்டங்களைவகுத்தல்; இராணுவ நடமாட்டம்பற்றி நீண்டகாலமடிகவிடாமுயற்சியுடன்வேவுபார்த்தல்; எதிர்பாராத வகையில்,திகைப்பூட்டும் விதத்தில்கடுகதிவேகத்தில் தாக்குதலை நடத்தி முடித்தல்; உறுதியும் செயலாற்றலுடனும் போரிடுதல்- இத்தகைய பண்புகள் தான் விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன.''
>
> இவ்வாறு குறிப்பிடுகிறார் பிரபல சிங்கள இராணுவ விமர்சகரான திரு. றோகன் குணசேகரா. "கிழக்கில் இராணுவத்தின் திணறல்'' என்ற தலைப்பில் அவர் ஐலண்ட் ஞாயிறு இதழில் எழுதிய கட்டுரையை இங்கு பிரசுரிக்கிறோம்.

ஈழநாதம்

# தமிழர் பற்றிப் பேசுவதை ஜெயலலிதா தடுக்க முனைகிறார்

## : பண்ருட்டி

'இலங்கைத் தமிழர்கள்பற்றி மாத்திரமல்ல இந்தியாவில் உள்ள தமிழர்களைப் பற்றி பேசுபவர்கள் மீதும் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க முனைகிறார்' என பாட்டாளி மக்கள் கட்சியின் எம். எல். ஏ. யானபண்ருட்டி எஸ். இராமச்சந்திரன் கடந்தவாரம் பிணையில் விடுதலை செய்யப்பட்டதன் பின்னால் பத்திரிகையாளரிடம் பேசும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் எந்தவொரு நியாயத்தின் அடிப்படையிலும் அல்லாமல் உணர்வுத் துடிப்புகளின் அவசரத்தின் அடிப்படையில் ஜெயலலிதா செயற்பட முனைகிறார் என்பதை அவரது அறிவிப்பு எடுத்துக் காட்டுகிறது.

தனக்கு பாதுகாப்பு இல்லை என்ற உணர்வே அவரை இவ்வாறு விபரீதமான ஒரு நிலைக்கு தள்ளி விட்டுள்ளது எனத் தெரிவித்த ராமச்சந்திரன் எம்மை பழிவாங்கும் உணர்வுடனேயே எம்மை கைது செய்ய உத்தரவிட்டார் எனத் தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் கோரிக்கை முழுநாட்டுக்குமே சுயநிர்ணய உரிமை இருக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்திற்கு மட்டும் நாம் கோரவில்லை. பிரதமர் நரசிம்மராவ் சர்வதேச அரசியலில் ஒரு நிபுணர் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு சர்வதேச அமைதிக்கு எவ்வாறுவழிவகுத்துள்ளது என்பதை அவரைத் தவிர எவரும் திறமையாக அறிந்து கொள்ள மாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

முன்னதாக சுயநிர்ணய உரிமை விவகாரத்தில் தி.மு.க பாட்டாளி மக்கள் கட்சியுடன் ஒத்துழைக்கவில்லை என கருதுகிறீர்களா என பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது பாட்டாளி மக்கள் கட்சியை ஆதரிப்பதோ நிராகரிப்பதோ மக்களைப் பொறுத்தது எனத் தெரிவித்தார்.

# பின்வாங்கியதாக சரித்திரமில்லை; விளைவை எதிர்நோக்க தயார்

## - ராம்தாஸ்

(சென்னை)

எந்த விளைவையும் எதிர்நோக்க நாம் தயாராயிருக்கிறோம் எமது சரித்திரத்தில் நாங்கள் பின்வாங்கியது கிடையாது என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரான டாக்டர் எஸ். ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்யுமாறு கோரி பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கு தான் கடிதம் எழுதியிருப்பதாக முதலமைச்சர் ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்திருப்பது தொடர்பாக ராம்தாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட எமது கட்சியை தடை செய்யக் கோருகிறார் என்றால் பாட்டாளி மக்கள் கட்சிக்கு அவர் எவ்வளவு பயப்படுகிறார் என்பதுதெளிவாகிறது- சுய நிர்ணய உரிமைக்கான எமது கோரிக்கையை மக்கள் முன் எடுத்துச் செல்வோம் அது தொடர்பாக தீர்மானிக்க வேண்டியது மக்களே எனத் தெரிவித்தார்-

# 'பூமியதிர்ச்சி' நடவடிக்கை ஒருவகைக் கண்துடைப்பாம்

(கொழும்பு)

அரசு பெரியளவில் விளம்பரப்படுத்தியதுபோல் வடபகுதியில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட பூமியதிர்ச்சி இராணுவ நடவடிக்கை அப்படி ஒன்றும் பெரியளவிலான இராணுவ நடவடிக்கை அல்ல என்று வடபகுதி இராணுவ தரப்பை மேற்கோள்காட்டி பெரமுன என்ற செய்தித்தாள் எழுதியுள்ளது.

வடபகுதி யுத்தமுனையில் கொப்பேகடுவாவும், விமலரட்னாவும் இறந்தாலும் போரை தொடர்ந்து வடபகுதி யுத்த ... என்று அந்தப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது என்று பத்தி எழுத்தாளர் அனுருத்த திலக்சிறி சண்டே ஒப்சேபரில் எழுதியுள்ளார்.

அத்துலத்முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த சமயம் (ஜே. ஆர். ஜெயவர்தனா காலம்) ஒரு தீவிரவாத அமைப்பாக இருந்த புலிகள் இயக்கம் உலகிலேயே பலமுள்ள ஒரு கெரில்லா அமைப்பாக மாறியதோடு, பெரும் ஆயுதபாணிகளாக வந்த 70,000 பேர் கொண்ட இந்திய இராணுவத்தையே ...

# கூட்டம்

சங்கீத பாட சேவைக்கால ஆலோசகர்களுக்கான விசேட கூட்டமும் சங்கீத அரங்கேற்றமும் நாளை காலை 9 00 மணியளவில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கீத பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில்மேற்படி நிகழ்ச்சிகள் நடைபெறும். (க)

# மாவீரர் நாளுக்கான ஆக்கங்கள்

எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நாளுக்கான கலை ஆக்கங்களின் பிரதிகளை பரிசீலனை செய்வதற்காக இம் மாதம் (15-10-91) ஆம் திகதிக்கு முன்னதாக விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

# 3000 ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்கும் அரசின் திட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டுக்கான காலப்பகுதிக்கு 12, 000 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவ் வருடத்துக்கான 15 000 ஆசிரிய நியமனம் வழங்கும் இலக்கை எட்டுவதற்கு ஒக்டோபர் 15 ஆம் திகதியளவில் மேலும் 3,000 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# முல்லையில் மக்கள் மாவீரருக்கு அஞ்சலி

மணலாற்றில் கடந்த இருபத்துமூன்றாம் திகதியன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். குருசாமி, 2-ம் லெப் ஞானம், 2-ம் லெப் நீயா ஆகியோரின் புகழுடல்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கும் புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், நெடுங்கேணி, முள்ளியவளை போன்ற இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இம் மாவீரர்களுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்களின் ''பாண்ட்'' வாத்திய இசையுடன் எடுத்துச் செல்லப்பட்ட அவர்களின் புகழுடல்கள், மாவீரர் துயிலும் இல்லத்தின் அருகில் இருக்கும் மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படடபோது முல்லைத்தீவு மாவட்டத்தளபதி பாண்டியன், முல்லை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா தமிழன்பன். முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்சங்கர், சுப்பிரமணியம், வரன் போன்றோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்ட இவ் நிகழ்ச்சியை அடுத்து இவர்களின் புகழுடல்கள் மாவீரர் துயிலும் இல்லத்தில் பின்னர் விதைக்கப்பட்டது.

## ராவ்

புலிகள் அமைப்பு பற்றியும் இந்திய அரசு ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய பொருளாதார ரீதியில் சிறிலங்காவுடன் தொழில் செய்யவும் ஆர்வம் காட்டுகிறது. வர்த்தகப் பரிமாறலுக்கான கடனுதவியைப் பெறவும் இந்தியா முன் வந்துள்ளது

## பல்வேறு

பங்களாதேஷ், யப்பான், சிலீ, கென்யா, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல்வேறு தொழிற்சங்க அமைப்புகள் இவ் வேண்டுகோள் கடிதங்களை அனுப்பியுள்ளன.

மேற்படி அவசரகால சட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்தும் போது எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள், பாதிப்புகள் பற்றி அக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனால் மேற்படி அவசரகாலச் சட்டங்கள் கைவிடப்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

### வடக்கு - கிழக்கு கடற்பரப்பில்

# கடற்படை மேலாதிக்கத்திற்கு புலிகளால் அச்சுறுத்தல் ஏற்படலாம்

## சிறிலங்கா அதிகாரிகள் அச்சம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குக் கடற்பரப்பில் தமது மேலாதிக்கம் தகர்க்கப்படலாம் எனச் சிறிலங்கா கடற்படையினர் அச்சம் கொண்டுள்ளதாக 'ஐலண்ட்'பத்திரிகை தெரிவித்துள்ளது. கடற்படை அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெளியிட்டுள்ள இச் செய்தியில் ஆழம் குறைந்த கடற்பரப்பில் செல்லக்கூடிய அதிவேகமுடைய ரோந்துப்படகை புலிகள் கடற்படையினரிடம் இருந்து கைப்பற்றியமை இதற்குக் காரணமாகத் தெரிவிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய தயாரிப்பான அதிவேக தாக்குதல் படகான டோராவின் வேகமான 40 நொட்ஸ்க்கு சமமான வேகத்தில் கைப்பற்றப்பட்ட படகு செல்லக் கூடியதாகும். இதன் மூலம் ஈழம் கடற்போரில் இதுவரை காலமும் இல்லாத வகையில் சமமான வேகமுடைய படகை அதாவது வேகத்தை புலிகள் பெற்று விட்டார்கள், என கடற்படை அதிகாரிகள் சுட்டிக் காட்டினார்கள்.

அதேசமயம் எப்போதுமே, எதிலுமே புதுமைகளை செய்யும் புலிகள் கைப்பற்றப்பட்ட படகை ஒத்த வடிவமைப்புடைய படகுகளை கட்ட முயற்சிக்கலாம்.

மூன்று வாரங்களுக்கு முன்னர், கடற்புலிகளின்சுழியோடிகள் இப்படகை மண்டைதீவில் வைத்து கைப்பற்றிச் சென்றார்கள் என தற்போது நம்பப்படுகிறது.

புலிகள் வழமையாய் பல வெளியிணைப்பு இயந்திரங்களைக் கொண்ட சிறிய 'டிங்கி' படகுகளையே ஆயுதங்களை கொண்டுவரவும், போராளிகளின் நகர்வுக்கும் பயன்படுத்தினர் இவை 30 நொட்ஸ் வேகமுடையனவாகும்.

அவர்கள் கடந்த காலத்தில் செய்ததுபோல, இப்படகுகளுக்கு பல வெளியிணைப்பு இயந்திரங்களைப் பொருத்துவதன்மூலம் கடற்படையினரின் படகுகட்கு இணையான வேகமுடைய படகுகளைப் பெற்றுக் கொள்வார்கள் என கடற்படை வட்டாரங்கள் விளக்கமளித்தன

அதேவேளை கடற்படையினரின் கப்பல்களின் மீது கடற்புலிகள் பல துணிகரமான தாக்குதல்களைக் கடந்த காலத்தில் நடாத்த முயற்சித்துள்ளனர் இந்த நடவடிக்கைகளில் சிறிய 'டிங்கி' படகுகளை பாதகமான காலநிலையில் தாக்குதல்களை நடாத்தி 'ரடாரில்' சிக்காமல் செய்துள்ளார்கள், கடைசி நேரத்தில் கடற்படையினரின் ரடார்களினால் கண்டுபிடிக்கப்படுவதனையும் கூட இவ்வாறு செய்வதன் மூலம் தவிர்த்து தாக்குதல் நடாத்தியுள்ளார்கள் எனவும் தெரிவித்ததாக ஐலண்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது

# வவுனியாவிற்கு ரெலோ குழு வந்தது

வவுனியா நகரப் பகுதிக்கு ரெலோ குழுவினர் வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் இராணுவத்துடன் சேர்ந்து செயலபடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

# நெடுமாறன் விடுதலை

(சென்னை)

அண்மையில் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரான ப. நெடுமாறனும் மற்றும் மூவரும் பிணையில்செல்வதற்கு நேற்று சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டது. தலா ஆயிரம் ரூபாவுக்கு ஒவ்வொருவரும் தனித்தனி பர்னட் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் நீதிமன்றம் மேலும் கூறியுள்ளது

# மன்னாரில் ஊரடங்கு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் மன்னார்தீவு தவிர்ந்த ஏனைய இடங்களில் நேற்றுக் காலை 6.00 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது மறு அறிவித்தல் வரைஅமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. புதிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாய் கூறப்படுகிறது

# அஞ்சலி

வீரவேங்கை

**றெஜி**

பிறப்பு
25 - 02 - 1976
வீரச்சாவு
21-07-1991



எஸ். ராம்தாஸ் தெரிவித்துள் வித்திருப்பது தொடர்பாக

# 'பூமியதிர்ச்சி' நடவடிக்கை ஒருவகைக் கண்துடைப்பாம்

(கொழும்பு)

அரசு பெரியளவில் விளம்பரப்படுத்தியதுபோல் வடபகுதியில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட பூமியதிர்ச்சி இராணுவ நடவடிக்கை அப்படி ஒன்றும் பெரியளவிலான இராணுவ நடவடிக்கை அல்ல என்று வடபகுதி இராணுவ தரப்பை மேற்கோள்காட்டி பெரமுன என்ற செய்தித்தாள் எழுதியுள்ளது.

வடபகுதி யுத்தமுனையில் கொப்பேகடுவாவும், விமலரட்னாவும் இறந்தாலும் போரை தொடர்ந்து வடபகுதி யுத்த முனையில் நடத்தமுடியும் என்பதைக் காட்டும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையே என்று அந்தப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது என்று பத்தி எழுத்தாளர் அனுருத்த திலக்சிறி சண்டே ஒப்சேபரில் எழுதியுள்ளார்.

அத்துலத்முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த சமயம் (ஜே. ஆர். ஜெயவர்தனா காலம்) ஒரு தீவிரவாத அமைப்பாக இருந்த புலிகள் இயக்கம் உலகிலேயே பலமுள்ள ஒரு கெரில்லா அமைப்பாக மாறியதோடு, பெரும் ஆயுதபாணிகளாக வந்த 70,000 பேர் கொண்ட இந்திய இராணுவத்தையே ஸ்தம்பிதமடையச் செய்துள்ளது என்றும் திலக்சிறி குறிப்பிடுகிறார்.

# 50ஆவது ஆண்டையொட்டி விளையாட்டுப் போட்டிகள்

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் அதன் 50-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திவரும் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஈச்சமோட்டை சனசமூகநிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரை இறுதிப் போட்டிகளில் முதலாவது போட்டியில் கொய்யாத்தோட்ட அணி ஈச்சமோட்டை அணியை 4:1 என்ற கோல் கணக்கிலும், இரண்டாவது ஆட்டத்தில் ஜெற்லைன்ஸ் அணி சுண்டுக்குளிஅணியை 4:0 என்றகோல் அடிப்படையிலும் தோற்கடித்தன.

இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக ஜி.எம். செபஸ்தியாம்பிள்ளை, கப்ரின் டீ.ஏ. எம். குணசிங்கம் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பிரதமவிருந்தினராக திரு. க. பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டு நிலையக் கொடியை ஏற்றிச் சம்பிரதாயமுறைப்படி போட்டிகளைத்தொடக்கிவைத்தார்

இன்று இடம்பெறவுள்ள இறுதிஆட்டத்தில் கொய்யாத்தோட்ட அணியை எதிர்த்து ஜெற்லைன்ஸ் அணி மோதும் இவ்வைபவத்தில் பிரதமவிருந்தினராகத் தொழில் அதிபர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் (ஞானம்) அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு கே தியாகராசாவும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

## அறிவித்தல்

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர் குடும்பங்கள் திருமலைத் தொடர்பகத்துடன் 10-10-92க்குமுன்னர்தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு:-
திருமலைத் தொடர்பகம்
கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(3297)

தடை செய்யக் கோருகிறார் என்றால் பாட்டாளி மக்கள் கட்சிக்கு அவர் எவ்வளவு பயப்படுகிறார் என்பது தெளிவாகிறது- சுய நிர்ணய உரிமைக்கான எமது கோரிக்கையை மக்கள் முன் எடுத்துச் செல்வோம் அது தொடர்பாக தீர்மானிக்க வேண்டியது மக்களே எனத் தெரிவித்தார்-

## கூட்டம்

சங்கீத பாட சேவைக்கால ஆலோசகர்களுக்கான விசேட கூட்டமும் சங்கீத அரங்கேற்றமும் நாளை காலை 9 00 மணியளவில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கீத பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணபதிப் பிள்ளை தலைமையில்மேற்படி நிகழ்ச்சிகள் நடைபெறும். (க)

## பொலிசார்

தெரியவருகிறது.

சமீப காலத்தில் தலைமறைவான படையினர் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும தெரிவிக்கப்படடது

சிங்கள இராணுவம் மற்றும் பொலிஸாரின் தலைமறைவு நடவடிக்கையை அடுத்து எல்லைப்புறங்களில் வசிக்கும் சிங்கள மக்கள் குழப்பமடைந்துள்ளனர் என்று கூறப்பட்டது (தி)

## ஐ.தே.க.

சம்பவங்கள்மற்றும் ஜே.வி.பி. பாணியில் நடந்த வங்கிக் கொள்ளை ஆகியவற்றைத் தொடர்ந்து தெற்கில் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜே. வி. பியினர் தமது அமைப்பை மீளமைப்புச் செய்யும் பணியில் இப்போது ஈடுபட்டு வருவதாக ஜே வி. பியின் செயற்பாடுகள் குறித்து அவதானிக்க நியமிக்கப்பட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் கூறுகின்றனர்.

தகவல்களின்படி, கடந்த சில மாதங்களில் மாத்திரம் சுமார் 250 பாரிய களவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வாகனங்களும் கடத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே. வி. பி. மீளவும் அதன் ஸ்தாபன அமைப்பைப் பலப்படுத்துவதாகவும், ஒரு கிளர்ச்சியை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலையில் ஜே.வி பி. ஈடுபட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் நடவடிக்கைக் குழுத் தலைவரும், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியுமான ஜே-எவ்-ஏ- சொய்ஸா கருத்துத் தெரிவித்திருக்கிறார்-

ஜே-வி-பியின் செயற்பாடுகள் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் சூடுபிடித்திருப்பதால் பல்கலைக் கழகத்தைத் தாம் உன்னிப்பாகக் கவனித்து வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பட்டது. இம் மாவீரர்களுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்களின் ''பாண்ட்'' வாத்திய இசையுடன் எடுத்துச் செல்லப்பட்ட அவர்களின் புகழுடல்கள், மாவீரர் துயிலும் இல்லத்தின் அருகில் இருக்கும் மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படடபோது முல்லைத்தீவு மாவட்டத்தளபதி பாண்டியன், முல்லை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா தமிழன்பன், முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்சங்கர், சுப்பிரமணியம், வரன் போன்றோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். பெருந்தொகையான மக்கள் கலந்து

## அடம்பனில்

இதே வேளை வேக அடி தாக்குதலின்போது தமது தரப்பில் ஒரு இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் ஐந்து பேர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## 85ு பேர்

சிறிலங்காஇராணுவத்தாலும், பொலிசாராலும் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக படை அதிகாரிகள் கூறுகின்றனர் இவ் விதியின் கீழ் அது சரியாயினும் மனித உரிமை மீறல் தொடர்பான சட்டத்தின் கீழ் இது சட்ட விரோதமானதும், மனித உரிமை மீறலுமாகும். இம் மனித உரிமைகளை மீறிய குற்றங்களுக்காக விரைவில்வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப் படும் என உறுதி அளித்துள்ள அதிகாரி இதற்கு பெரும் தொகை பணம் தேவைப்படுவதாகவும், அதனை வழங்குமாறு தான் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களை கோரியுள்ளதாகவும் அவை மூலம் பணம் கிடைக்கும் பட்சத்தில் விரைவில் வழக்கு தொடரப் படும் என்றார். அத்துடன் இதுதொடர்பாக தேவையான தகவல்களை தான் திரட்டி வருவதாகவும் தடுத்து வைத்துள்ளோரை சில மாதங்களுக் கொருதடவை வெவ்வேறு முகாம்களுக்கு படையினர் மாற்றுவதால் கைது செய்யப் பட்ட திகதியைக் கண்டுபிடிக்க முடியாதிருப்பதாகவும் அவர் வெளியிட்டுள்ள அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## உத்தியோக

பிரேமதாசா சார்க் நாடுகளுக்கான தமது இரண்டாவது கட்டப் பயணத்தை இன்று ஆரம்பிக்கின்றார். இந்தியா, பங்களாதேஷ், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொள்கிறார்

இந்திய பொருளாதார ரீதியில் சிறிலங்காவுடன் தொழில் செய்யவும் ஆர்வம் காட்டுகிறது. வர்த்தகப் பரிமாறலுக்கான கடனுதவியைப் பெறவும் இந்தியா முன் வந்துள்ளது

## பல்வேறு

பங்களாதேஷ், யப்பான், சிலீ, கென்யா, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல்வேறு தொழிற்சங்க அமைப்புகள் இவ் வேண்டுகோள் கடிதங்களை அனுப்பியுள்ளன.

மேற்படி அவசரகால சட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்தும் போது எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள், பாதிப்புகள் பற்றி அக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனால் மேற்படி அவசரகாலச் சட்டங்கள் கைவிடப்படவேண்டும் எனவும் சுட்டிக்காடடப்பட்டுள்ளது

அதேசமயம், சர்வதேச தொழிற்சங்க அமைப்புகளாலும் சிறிலங்கா அரசிடம் அவசர காலச் சட்ட திட்டங்களை நீக்கும்படி பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதாயும் தெரிய வருகின்றது

## உதவியை

இதற்கு முன்னோடி நடவடிக்கையாக தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள சர்வதேச தொழிற் சங்க அமைப்பின் அதிகாரிகளுடன் சந்தித்துப் பேச ஒரு தூதுக்குழு அனுப்பப்படும்.

தங்களது உரிமைகளுக்காக போராடும் உரிமையும், கருத்து வெளியிடுவதற்கான அடிப்படைச் சுதந்திரமும் தம்மிடமிருந்து பறித்துக் கொள்ளப் பட்டுவிட்டன என்பதை தூதுக்குழுவினர் எடுத்துக் கூறுவர்.

தமது கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்காக துண்டுப் பிரசுரங்களும் மறியல் போராட்டங்களும் நடாத்தப் படும் எனவும் தொழிற் சங்க வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அதேசமயம் அரசால் அண்மையில் ஏற்றுமதி நிர்வாகம் தொடர்பாக அமுல் படுத்தப்பட்ட அவசரகால விதிமுறைகளையும் எதிரணித் தொழிற் சங்கங்கள் கண்டனம் செய்துள்ளன.

## எறிகணை

நோக்கி எறிகணைத்தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று நடைபெற்ற இத் தாக்குதலில் பாக்கியம் (வயது 72) என்ற வயோதிபப் பெண் காயமடைந்திருக்கிறார். (க)

## வீரச்சாவு

வீரவேங்கை வில்லவன் (சுதன், கந்தசாமி ஜெயக்குமார் இடைக்காடு அச்சுவேலி) என்பவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். அவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கம் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

மாறனும் மற்றும் மூவரும் பிணையில்செல்வதற்கு நேற்று சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டது. தலா ஆயிரம் ரூபாவுக்கு ஒவ்வொருவரும் தனித்தனி பர்னட் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் நீதிமன்றம் மேலும் கூறியுள்ளது

6.00 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது மறு அறிவித்தல் வரைஅமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. புதிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் படுவதாய் கூறப்படுகிறது

## அஞ்சலி

வீரவேங்கை

**றெஜி**

பிறப்பு
25 - 02 - 1976
வீரச்சாவு
21-07-1991



21-07-1991 அன்று ஆனையிறவில் இடம்பெற்ற ஆகாய, கடல், வெளிச் சமரின்போது வீரச்சாவடைந்த வீரவேங்கை றெஜிக்கு(பற்குணராஜா செந்தூரன், டச்சுவீதி மானிப்பாய்) எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- நண்பர்கள்

## மரண அறிவித்தல்

திருமதி
**பிரன்சினா சுசானா பசுபதி**

[ஆசிரியை பரந்தன் இந்து மகாவித்தியாலயம், மனைப் பொருளியல் ஆசிரிய ஆலோசகர், கிளிநொச்சி மாவட்டம்]

பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த திருமதி பிரன்சினா சுசானா பசுபதி 22 - 09 - 92இல் காலமானார். இவர் முரசுமோட்டை றோ.க வித்தியாலயத்தின்அதிபர் வ. பசுபதியின் அன்பு மனைவியும், ப. ஆனந்தராஜ் (கிளி/மத்திய மகா வித்தியாலய உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவன்), ப. ஆனந்தி (பரந்தன் இந்து மகாவித்தியாலய க. பொ. த சாதாரண தர மாணவி) ஆகியோரின் அன்புத் தாயுமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் அவரது குமரபுர இல்லத்தில் 23 - 09 - 92 இல் நடைபெற்று பரந்தன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வ. பசுபதி
(கணவன்)

(சி- 5147)

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**30-09-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5936

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

40-5323, 27-6887, 26-4436, 27-2854, 28-4672, 26-3632, 26-5178, 28-3735, 27-2016, 24-5721, 26-7393, 41-9480, 24-7078, 28 5529, 24-5599, 41-8068, 28-2149, 41-9167,

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது